**செய்தி வெளியீடு எண்: 13/2026** **நாள்: 09.02.2026**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம், கொடைக்கானலில் மலைப்பகுதி போக்குவரத்து அமைப்புகள் மற்றும் மாமல்லபுரத்தில் கயிறு வழி போக்குவரத்து அமைப்பிற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளை தயாரிப்பதற்கான ஆலோசனைப் பணிக்கான ஒப்பந்தத்தை வழங்கியுள்ளது**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் (CMAML), கொடைக்கானலில் உயரமான மலைப்பகுதியில் ரோப்வே போக்குவரத்து அமைப்பு (High-Altitude Ropeway Transport Systems) மற்றும் மாமல்லபுரத்தில் கேபிள் மூலம் இயங்கும் போக்குவரத்து (Cable Propelled Transport System) அமைப்பிற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளை (DFR) தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

கொடைக்கானலில் முன்மொழியப்பட்டுள்ள உயரமான மலைப்பகுதிகளுக்கான ரோப்வே போக்குவரத்து அமைப்பு, மலைப்பிரதேசத்தில் சுற்றுலா மற்றும் பிராந்திய இணைப்பை மேம்படுத்துவதோடு, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து தீர்வுகளை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாமல்லபுரத்திற்கான கேபிள் மூலம் இயங்கும் போக்குவரத்து அமைப்பு, யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னங்களை ஒரு தனித்துவமான மற்றும் பரந்த (panoramic) காட்சியாகக் காணும் வசதியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், இது பாரம்பரியப் பகுதிக்குள் பார்வையாளர்களின் அணுகலையும் நடமாட்டத்தையும் மேம்படுத்தும்.

இந்த இரண்டு அமைப்புகளும் பாதுகாப்பான, திறமையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து மாற்று வழிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுற்றுலா வளர்ச்சியை ஆதரிப்பதோடு, அதிக மக்கள் வருகை தரும் இந்த இடங்களில் இணைப்பு சேவை (last-mile connectivity) வசதியையும் மேம்படுத்துகிறது.

சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் இரு திட்டங்களுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கைகளை (Detailed Feasibility Reports) தயாரிப்பதற்காக, புது டெல்லியைச் சேர்ந்த வாப்கோஸ் லிமிடெட் (WAPCOS Limited) நிறுவனத்தை ஆலோசகராக நியமித்துள்ளது. இதற்கான

ஆலோசனைக் கட்டணமாக கொடைக்கானல் திட்டத்திற்கு ரூ. 78.28 லட்சமும், மாமல்லபுரம் திட்டத்திற்கு ரூ. 71.93 லட்சமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பணிக்கான ஆய்வு காலமும் 120 நாட்கள் ஆகும்.

இந்த ஆலோசனையில், தொழில்நுட்ப சாத்தியக்கூறு, சிறந்த பாதைகளைத் தேர்வு செய்தல், பயணிகளின் எண்ணிக்கை, மற்றும் இதனால் சுற்றுச்சூழல் மற்றும் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இந்த ஆய்வின் மூலம் கிடைக்கும் தகவல்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கவும், எதிர்காலப் பணிகளைத் திட்டமிடவும் அடிப்படையாக அமையும்.

சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் தலைவர் திரு. எம்.ஏ.சித்திக் இ.ஆ.ப., முன்னிலையில், சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி. ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மற்றும் வாப்கோஸ் (WAPCOS Limited) நிறுவனத்த்தின் திட்ட மேலாளர் திரு. என். ராமன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நிதி இயக்குநர் திரு எஸ். கிருஷ்ணமூர்த்தி, IRAS, தலைமை பொது மேலாளர் டாக்டர் டி. ஜெபசெல்வின் க்ளாட்சன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: மக்கள் தொடர்பு துறை,**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**